## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு – 2014

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 22(ஏ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) கணக்கீட்டு நியம இலக்கம் 01 | நிறுவனத்தால் அதன் செலவினம், செலவினங்களின் தன்மையின் படி அல்லது நிறுவனத்தின் செயற்பாடுகளுக்குரிய வகையில் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவால் ஆணைக்குழுவின் பணிகளுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 930.8 மில்லியன் தொகை நிறுவனத்தின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் செலவினமாக (Regulatory Expenses) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.<br><br>இச்செலவினங்கள் மீளாய்வாண்டில் ஒழுங்குபடுத்துதல் செலவினங்களில் 92 சதவீதமாக இருந்தது. ஆரம்பம் முதல் நிறுவன, சமூகப் பொறுப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் ஒழுங்குபடுத்துதல் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையும் இது நிருவாகச் செலவினம் அல்லாததால் நிருவாகச் செலவினத்தின் கீழ் காண்பிக்க முடியாதிருந்தமையும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் நல்லாளுகைச் செலவினமாக நிறுவன, சமூகப் பொறுப்புக்கள் |

---

கண்டறியப்பட்டமையால் ஒழுங்குபடுத்துதல் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்றமையும் ஆணைக்குழுவின் தலைவரால் 2015 யூன் 19 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கணக்கீட்டு நியம இலக்கம் 08 | | முன்னைய ஆண்டின் பிழை சரிப்படுத்தல்களாக இனங்காணப்பட்ட ரூபா 195 மில்லியன் கடந்த கால ஒப்பீட்டுத் தகவல்களுடன் சீராக்கம் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் செலவினங்களிலிருந்து கழித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | கணக்கீட்டு நியம இலக்கம் 16 | (i) | ஆதனம், பொறி உபகரணங்களுக்காக பெறுமானத்தேய்விடப்படுகையில் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு உகந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்ட நாள் முதல் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுகையில் முழு ஆண்டிற்காகவும் அகற்றப்படும் ஆண்டின் போது பெறுமானத்தேய்விடப்படாது விடுவதற்குமான கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது. |
| | | (ii) | ஆணைக்குழுவிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 112 ஏக்கர் 01 ரூட் 10.5 பேர்ச் அளவிலான காணியிலிருந்து ஏறத்தாழ 50 சதவீதமான அளவு கட்டான பிரதேச செயலகத்தால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அம் முழுக் காணியின் பெறுமதி ரூபா 45 மில்லியனும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு நியாயப் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த 12 ஆண்டு காலப்பகுதியில் இது கணக்குக் குறிப்பொன்றின் மூலம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| | | (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட எனினும், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ரூபா 445.7 மில்லியன் கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

---

(ஈ) கணக்கீட்டு நியம இலக்கம் 18

(i) செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திரம் 10 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் ஒரு தடவை வழங்கப்பட வேண்டியமையினால் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை புதுப்பிக்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணம் புதுப்பிக்கப்பட்ட ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. எனினும் இதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் படி முன்னைய ஆண்டில் ரூபா 2,060 மில்லியன் தொகையான செயற்பாட்டு நடத்துனர் அனுமதிப்பத்திரக் கட்டணம் மீளாய்வாண்டின் போது ரூபா 261 மில்லியன் வரை விலகல்களுக்குள்ளாகியிருந்தது.

(ii) புதிய அலை வரிசை விற்பனையிலிருந்து கிடைத்த வருமானத்தை (Freequency upfront fees) இனங்காணும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் கட்டண அறவிடல்களில் செயற்படுத்தும் நிறுவனத்துடன் மாற்றப்பட்ட தொகை (மீளச்செலுத்தப்பட்ட) செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்குப் பதிலாக அறவிடப்பட்ட தேறிய பெறுமதி அதாவது ரூபா 5,493 மில்லியன் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.

(உ) கணக்கீட்டு நியம இலக்கம் 23

தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக அ.ஐ.டொலர் 88.655 மில்லியன் கடன் பணம் 2012 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் அ.ஐ.டொலர் 34.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த கடன் பணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,413 மில்லியன் கடன் பெறல் கிரயமாகச் செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த நியமத்தின் படி மூலதனமாக்கப்பட்ட தகைமை பெற்ற கடன் பெறல் கிரயத்தின் அளவும் அதில் மூலதனமாக்கும் விகிதமும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது ரூபா 113,052,702 பெறுமதியான விலைப் பட்டியல் முன்னைய ஆண்டிற்காக வழங்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டில் அலை வரிசை அனுமதிப்பத்திர

வருமானம் ரூபா 113 மில்லியன் தொகை கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் வியாபாரக் கடன்பட்டோராக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலவிய தொகையில் ரூபா 355 மில்லியன் தொகை 02 ஆண்டுகளுக்கு மேலான கடன் மீதியாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியில் 20 ஆண்டுகளுக்கு மேலான காலம் முதல் நிலவிவரும் கடன் மீதிகளும் அடங்கியிருந்தது.

(ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 116 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் வரையில் 08 அலை வரிசைகளுக்கு விலைப்பட்டியல் இடப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 வருடங்களுக்கு மேலான காலமாக அறவிடப்படாதுள்ள ஊழியர் கடன் மீதி ரூபா 2 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஈ) கொக்காவில் அன்டெனா மற்றும் பரிமாற்றக் கோபுரங்களைப் பயன்படுத்தும் செயற்பாட்டாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய மின்சாரப் பட்டியல் மற்றும் மின் உற்பத்தி இயந்திரத்திற்கான எரிபொருள் செலவினமான ரூபா 71.6 மில்லியன் தொகை என்பவற்றை 2011 யூன் மாதம் முதல் அறவிடுவதற்கான நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கடன்பட்டோர் மீதிப் பட்டியலின் படி ரூபா 999,418 தொகையான மறை மீதியுடன் கடன்பட்டோர்களின் எண்ணிக்கை 248 ஆக இருந்ததுடன் இந்த மறை மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது நீண்ட காலமாக தொடர்ச்சியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2000 யூன் 27 ஆம் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆணைக்குழுவால் ரூபா 14,700 மில்லியன் தொகை வங்கியில் நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவால் 2003 ஆம் ஆண்டில் சேமிப்பு வங்கியொன்றில் அமெரிக்க டொலர் 420,000 தொகையும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2011 சனவரி 27 ஆம் திகதிய பீஈ 56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிறுவனத்தின் 06 மாத தொழிற்படு மூலதனத் தேவையை விஞ்சிய நிதியம் திரண்ட நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவால் அதன் படி நடவடிக்கை |

| | |
|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1987 இன் 03 ஆம் இலக்க ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச்சட்டம் | |
| (i) 6(i)(அ) பிரிவு | ஒப்பந்த உடன்படிக்கை கிரயம் ரூபா 5,000,000 இனை விஞ்சுகின்ற சந்தர்ப்பத்தில் சகல கேள்விதாரரும் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 2,494 மில்லியன் தொகையான அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவில் தொலைத்தொடர்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக முன்வந்த கேள்விதாரர்கள் அவ்வாறு பதிவுசெய்திருந்த கேள்விதாரர்களா என உறுதிப்படுத்த முடியவில்லை. |
| (ii) 12 ஆம் பிரிவு | இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் உள்ள கேள்விச் சபை / மதிப்பீட்டுச் சபையினால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் கேள்வி கையளிக்கப்பட்டு 60 நாட்களுக்குள் ஒப்பந்த உடன்படிக்கை இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய பேதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | |
| (i) II ஆம் அத்தியாயத்தின் 2.3 ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் ஆட்சேர்ப்பதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அது பயன்படுத்தப்பட்ட போதிலும் அதற்காக தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 1996 இன் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 22(இ)(2) ஆம் பிரிவின் படி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தமை 2015 யூன் 19 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 மற்றும் 12.6.1 ஆம் பிரிவுகள் | பதவியொன்றில் பதில் கடமைக்கு நியமிக்கும் போது பதில் கடமைக்கு உரித்தான சம்பளத்தில் 25 சதவீதம் மாத்திரம் செலுத்த முடியுமான போதிலும் ஆணைக்குழுவிற்கு பதில் கடமைக்காக நியமிக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமை பதவியின் சம்பளத்தில் 50 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு 2013 செப்தெம்பர் முதல் 2014 திசெம்பர் வரை 50 சதவீத படியாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 460,000 ஆக இருந்தது. மேற்கூறப்பட்ட பிரிவின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| | | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தாபனவிதிக் கோவையின் படி செலுத்தப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவரினால் 2015 யூன் 19 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| | (iii) XXIV ஆம் அத்தியாயத்தின் 7.2.5 ஆம் பிரிவு | வாகனக் கடன் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் பெறக்கூடியதாக இருந்த போதிலும், மொழிபெயர்ப்பாளரால் 2006 மே மாதம் பெறப்பட்ட வாகனக் கடன் பண மீதி 2010 யூன் மாதம் தீர்க்கப்பட்டு அந்த ஆண்டின் போதே ரூபா ஒரு மில்லியன் வாகனக் கடன் பெறப்பட்டு, மீளவும் 2014 பெப்ரவரி 05 ஆந் திகதி செலுத்துவதற்கிருந்த கடன் மீதி தீர்க்கப்பட்டு 2014 மார்ச் 12 ஆந் திகதி ரூபா 2.7 மில்லியன் கடன் தொகை பெறப்பட்டிருந்தது. ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 2012 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய TRC/04/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி இவ்வாறு வாகனக் கடன் வழங்கப்பட்டிருந்ததாக ஆணைக்குழுவின் தலைவரினால் 2015 யூன் 19 ஆந் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 757(2) | ஆணைக்குழுவால் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2007 யூன் 12 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | வாகனக் கடன் வழங்குதல் வர்த்தக வங்கிகளின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதும் ஆணைக்குழுவின் 2013 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய TRC/04/12 ஆம் இலக்க சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து 35 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 64 மில்லியன் வாகனக் கடன் செலுத்தப்பட்டிருந்தன. |
| (எ) | 2007 யூன் 12 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2.2 (ஆ) மற்றும் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 7.4.1 ஆம் உப பிரிவு | வாகனக் கடன் வழங்கப்படுகையில் அறவிடப்பட வேண்டிய வட்டி தொடர்பாக பொதுத் திறைசேரியிலிருந்து ஆராயாது மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 4.2 சதவீத வருடாந்த வட்டி மாத்திரம் ஆணைக்குழுவால் அறவிடப்பட்டிருந்தது. |
| (ஏ) | 2005 சனவரி 27 ஆம் திகதிய PED/27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | இறுதிக் கணக்குகளுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | நிதி, திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | |
| | (i) 2010 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 01/2010/01 ஆம் | 2014 ஒக்தோபர் 19 முதல் நவம்பர் 08 வரை கொரியாவில் நடைபெற்ற நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கையின் |

| | | |
|---|---|---|
| | இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பிரிவு | பிரகாரம் இரண்டாவது தொகுதிக்குரிய 15 உத்தியோகத்தர்களுக்கு முதலாவது தொகுதிக்குரியதாகக் கருதி இணைந்த படியாக நாளொன்றுக்கு யூ.எஸ். டொலர் 400 படி செலுத்தப்பட்டிருந்தது. செலுத்த வேண்டிய இணைந்த படி நாளொன்றுக்கு யூ.எஸ். டொலர் 320 படி ரூபா 1.9 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| | 6(V) ஆம் பிரிவு | வெளிநாட்டுப் பிரயாணங்களுக்காக படிகளைச் செலுத்தும் போது 15 நாட்களை விஞ்சுகின்ற சந்தர்ப்பங்களின் போது திறைசேரிப் பிரதிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அது பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு அங்கீகாரமின்றி 6 நாட்கள் படி மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 870,844 தொகையான இணைந்த மற்றும் அமையப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 2011 திசெம்பர் 30 ஆம் திகதிய பீடீ/சீபிபீ/1/1/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | ஊழியர் ஒருவருக்காகச் செலுத்தக்கூடிய ஒட்டுமொத்த இடர் கடனின் அளவு ரூபா 250,000 ஆகக்கூடிய எல்லையாக இருந்த போதிலும் TRC/2012 ஆம் சுற்றறிக்கையின் படி 39 சந்தர்ப்பங்களின் போது அந்த எல்லையினை விஞ்சி ரூபா 9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஒ) | தேர்தல்கள் ஆணையாளரின் 2014 நவம்பர் 22 ஆம் திகதிய PRE/2015/43 ஆம் இலக்க கடிதம் | 2015 இன் சனாதிபதி தேர்தலுக்காக வேட்பு மனு கோரப்பட்ட திகதியான 2014 நவம்பர் 21 ஆந் திகதி முதல் சனாதிபதி தேர்தல் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு முடியும் வரை சனாதிபதி தேர்தல் காலத்தின் போது அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் நீதிமன்ற சேவை ஆணைக்குழுக்களின் அதிகாரங்களின் கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தவிர அரசாங்க நிறுவனங்களில் எவ்வகையிலும் ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகளை மேற்கொள்ளுதல் தவிர்க்கப்பட வேண்டியமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக ஆணைக்குழுவினால் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 12 உத்தியோகத்தர்களுக்கு 2015 சனவரி 01 ஆந் திகதி நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஓ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி உப பாகங்களுக்காக தனியான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி அங்கீகாரமின்றி ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் வருகைப் படி, மிகையூதியப் படி, தொலைத்தொடர்புப் படி மற்றும் வீட்டு வாடகைப் படியாக ரூபா 36 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக் குழுவின் 2007 யூன் 01 ஆம் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீசீ/24 ஆம் இலக்க கடிதத்தில் பதவிநிலைத் தரமற்ற பதவியணியினர்களுக்காக ரூபா 2,000 மாதாந்த போக்குவரத்துப் படி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி மாதாந்தம் ரூபா 6,000 படி போக்குவரத்துப் படியொன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டிற்காக மிகைக் கட்டண எல்லையை விஞ்சி செலுத்தப்பட்ட தொகை ரூபா 17 மில்லியனாக இருந்தது.

(இ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாமல் ரூபா 6,782,889 கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 33 இற்கு முரணாகவும் அமைச்சரவை அங்கீகாரமின்றியும் தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக ஆணைக்குழுவின் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 05 உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் ரூபா 455,000 படி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை இவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 10.9 மில்லியனாக இருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் வரிக்கு முன்னரான இலாபம் 46,266 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் 47,367 மில்லியனாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,101 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு நடத்துனர் கட்டணம் மற்றும் புதிய தொலைத்தொடர்பு ஏல விற்பனையில் பெறப்பட்ட கட்டணம் ரூபா 7,459 மில்லியனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 ஆணைக்குழுவிற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டவிடயங்கள்

வெளி நிறுவனங்கள், வெளி நபர்கள் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களினால் ஆணைக்குழுவிற்கு எதிராக நீதிமன்றங்களில் 13 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அதில் 02 வெளி நிறுவனங்களினால் முறையே அலைவரிசை செயற்திட்டத்தை அமுல்படுத்தாமை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையை மீறியமையின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு ரூபா 47,346 மில்லியன் நட்டஈடாகக் கோரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 தொலைத்தொடர்பு அலைவரிசை வலைப்பின்னலை அமுல்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தொலைத்தொடர்பு அலைவரிசை வலைப்பின்னல் உரியமுறையில் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துதல் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஒரு நோக்கமாக இருந்த

போதிலும் அலைவரிசை பயன்படுத்தும் போது பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக உறுதிப்படுத்தி நடத்துனர்களினாலும் ஏனைய நபர்களினாலும் அலைவரிசை பயன்படுத்தும் போது ஏற்பட்ட இடையூறுகள் தொடர்பாக 27 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் போது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்தது. தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் காணப்படும் சமிக்ஞைகள் அவதானிப்பு கட்டமைப்பு 17 வருடங்களை விட பழமைவாய்ந்ததால் புதிய ஒலிபரப்பு அலைகளை அவதானிப்பு செய்யும் போது இடையூறுகள் ஏற்பட்டிருந்ததாக 2015 யூன் 19 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவரால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அலைவரிசை வழங்கப்பட்ட 166 நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 58 நிறுவனங்கள் அதாவது 35 சதவீதத்திற்காக கோவைகள் செயற்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 45 நிறுவனங்களின் கோவைகள் 10 வருடங்களாக செயற்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு செயற்படுத்தப்படாத நிறுவனங்களின் உபகரணங்களை முத்திரையிட்டு மூடிவிடுதல் சாதாரண நடைமுறையாக இருந்த போதிலும் இது வரையிலும் அச் செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இதன் மூலம் இந்த நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தாது செயற்படுகின்ற ஆபத்துக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 மார்ச் 25 ஆந் திகதி வரையில் 07 தொலைத்தொடர்பு செயற்படுத்தும் நிறுவனங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக் கணக்குகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டினுள் அந்த நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 978 மில்லியன் செஸ் வரித் தொகையின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) செஸ் வரி செலுத்தாமை அல்லது தாமதித்து செலுத்துகின்ற செயற்படுத்துனர்களுக்காக தண்டப் பணமொன்றை அறவிடுவதற்காக சட்டரீதியான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பிரிவுகளை தொலைத்தொடர்பு அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பணிப்பாளர் நாயகத்தினால் 2011 யூன் 28 ஆந் திகதியும் 2012 யூன் 16 ஆந் திகதியும் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அலைவரிசை வருமானத்தை அறவிடுவதற்காக முறையான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை மாத்திரம் விநியோகிக்கப்பட்ட விலைப்படியல்களுக்கிடையே ரூபா 68 மில்லியன் தொகையான விலைப்படியல்களுக்காக 2015 மார்ச் 03 ஆந் திகதி வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அலைவரிசை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் தாமதக் காலத்தின் போது அனுமதிப்பத்திரமின்றி அலைவரிசைகளைப் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 20 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அலைவரிசைகளுக்காக 02 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையிலான காலப்பகுதியில் விலைப்பட்டியல் விநியோகிக்கப்படாதிருந்ததுடன் அவ்வாறு செய்யாமைக்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு வரி அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் வரி செலுத்த வேண்டிய 03 நிறுவனங்களினால் 2011, 2012 மற்றும் மீளாய்வாண்டுக்குரிய வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சனாதிபதியின் செயலாளர் ஆணைக்குழுவின் தலைவராக வருவதுடன் அவரால் சனாதிபதியின் செயலாளராக வேண்டப்பட்ட கோரிக்கையின்படி 2014 திசெம்பர் 15 ஆந் திகதிய ஆணைக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் சமூக விழுமியங்கள் மற்றும் மத சம்பிரதாயங்களைப் பாதுகாப்பதற்காக மக்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக அதாவது வயதுவந்தோர் மற்றும் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு சில் துணிகளை பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 600 மில்லியன் பொதுத்திறைசேரியின் அங்கீகாரமின்றி சனாதிபதி செயலகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நாட்டின் சகல விகாரைகளுக்கும் வழங்குவதற்காக சனாதிபதியின் இணைப்புச் செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையிலும் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலும் 2015 ஆம் ஆண்டிற்கான 30,000 தினக்குறிப்பேடுகள் அச்சிட்டு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 18 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(இ) அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கோரிக்கையின் படி 500,000 சிறிய தர்ம நூல்கள் அச்சிடுவதற்காக ரூபா 2.5 மில்லியன் தொகை ஆணைக்குழுவினால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள கம்பனியொன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சரவையினதும் திறைசேரியினதும் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி ஜோன்கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நிர்மணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற தென் பல்கலைக்கழகத்திற்காக ரூபா 250 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது.

(உ) கட்டிடமொன்றை வாடகைக்கு எடுத்தல் மற்றும் அதற்காக அலுவலக உபகரணங்களை பெற்றுக்கொள்ளல்.

(i) ஆணைக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் லொண்டன் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடமொன்றுக்கு 06 மாதத்திற்கான நிறுத்திவைத்தல் பணமாக ரூபா 1.8 மில்லியன் தொகை செலுத்தி மாதாந்தம் ரூபா 300,000 படி செலுத்தும் அடிப்படையில் கூறுவிலை கோரப்படாமலும் நிதிப்பிரமாணம் 835(2)(இ) ஆம் பிரிவு மற்றும் 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் மீளாய்வாண்டின் நவம்பர் மாதம் முதல் ஒரு வருட காலத்திற்காக பெறப்பட்டிருந்தது.

(ii) ஆணைக்குழு கட்டிடத்தை புனரமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டமையால் அந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது ஆணைக்குழுவின் சில அலுவலகங்களை அந்த இடத்திற்கு எடுத்துச் செல்லும் தேவையின் அடிப்படையில் இக்கட்டிடம் வாடகை அடிப்படையில் பெறப்பட்டதாக அறவிக்கப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவின் கட்டிடத்தில் புனரமைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கவோ அல்லது ஆணைக்குழு அலுவலகம் வாடகைக் கட்டிடத்திற்கு எடுத்துச் செல்லப்படவோ இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) இக்கட்டிடம் புலனாய்வுப் பிரிவாக இனங்காணப்பட்டு கணனி கொள்வனவு உட்பட செலவினங்களுக்காக ரூபா 10 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் அம்பாந்தோட்டை தொழில்நுட்ப நிலையத்தை நிர்மாணிப்பதற்கு உரிய மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தம் ரூபா 132 மில்லியன் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதிக்கு நில மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு (SLLRDC) கையளிக்கப்பட்டிருக்கும் போது வெளி மதியுரையாளர் மூவருக்கு மாதமொன்றிற்கு ரூபா 100,000 படி 04 மாதகால எல்லைக்கு ரூபா 1.2 மில்லியன் மேலதிகத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாமரைக் கோபுர நிர்மாணம்

(i) 2012 செப்தெம்பர் 17 ஆந் திகதி இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுடன் சீனாவின் இறக்குமதி ஏற்றுமதி வங்கி கைச்சாத்திட்ட கடன் உடன்படிக்கையின் படி சீன இறக்குமதி ஏற்றுமதி வங்கியினால் ஆணைக்குழுவிற்கு அ.ஐ.டொலர் 88.655 மில்லியன் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி நிர்மாண நடவடிக்கைகள் 2015 மே 12 ஆந் திகதி வரையிலும் அதாவது 912 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் 2015 யூலை 13 ஆந் திகதி வரையும் பூர்த்தி செய்யப்படாமையினால் கடன் பணத்தில் பயன்படுத்தப்படாத அ.ஐ.டொலர் 53 மில்லியனுக்காக 0.7 சதவீத இணக்க கட்டணத்தைச் செலுத்த வேண்டியேற்பட்டதுடன் கடன் தொகை செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டிய கால எல்லை நீடிக்கப்பட்டமையால் அதற்காகச் செலுத்த வேண்டிய வட்டியும் அதிகரித்திருந்தது.

(ii) தாமரைக் கோபுர செயற்திட்டம் தேசிய முக்கியத்துவமுடைய செயற்திட்டமாகக் கருதி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட காணி, தற்போது செலவிடப்பட்டுள்ள கிரயத்தை மாத்திரம் அறவிட்டுக் கொள்ளும் அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட வேண்டியதாக அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகாரசபை செய்த செலவினத்தை மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது ரூபா 11.7 பில்லியன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையால் ரூபா 2.1 பில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) கடன் பணத்தின் காப்புறுதிக்காக ரூபா 1,145 மில்லியன் காப்புறுதிக் கம்பனியொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் கடன் பணத்தைச் செலுத்தும் போது காப்புறுதி நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படா திருந்ததுடன் நிர்மாணங்களின் தாமதம் கடன் காப்புறுதிக்கு எதிராக தாக்கமளிக்கும் முறையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iv) நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படுகின்ற போது செயற்திட்டத்தின் கட்டமைப்பின் படி அவ்வப்போது திட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை கணக்காய்வின் போது அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரையிலும் அதாவது வேலை பூர்த்தி

செய்யப்பட வேண்டிய காலத்தில் அண்ணளவாக 95 சதவீத காலம் கடந்திருந்தும் ஒப்பந்தக் கிரயம் மாற்றமடைதல் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) ஆரம்ப வேலை திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் கோபுரத்தின் வேலை இறுதிக் கட்டிடத்தில் இருக்க வேண்டியிருந்ததுடன் 2015 மே 12 அளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு சகல உபகரணங்களும் பொருத்தி பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் 2015 மார்ச் 16 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த செயற்திட்டத்தின் வேலை முடிவுறுத்தல் செயல் முன்னேற்றம் 46.87 சதவீதமாக இருந்தது.

(ஆ) அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவின் தொலைத்தொடர்பு நிலைய நிர்மாணம்

(i) இந்த செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தக் கிரயம் அண்ணளவாக ரூபா 2,000 மில்லியன் என அமைச்சரவைக்கு விடயங்களைக் காண்பித்து அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் பொறியியல் மதிப்பிட்டின் படி (பெறுமதி சேர் வரி தவிர்த்து) செயற்திட்டக் கிரயம் ரூபா 2,663 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 434 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்ட மேலெழுப்பப்பட்ட நிலத்தின் (Raised Floor) செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த விலை ரூபா 130 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் பின்னர் இந்த செயற்பாடுகள் ஏனைய உப ஒப்பந்தமாக வருகைப் படியாக ரூபா 15 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 449 மில்லியனுக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் படி ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்துவதற்கு இணங்கப்பட்ட தொகை ரூபா 319 மில்லியனாக இருந்தது.

(இ) ஆணைக்குழுவின் கீழ் தளத்தில் கேட்போர் கூடத்தை நவீன மயப்படுத்தல்:

(i) இந் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் திறந்த கூறுவிலை கோரலின்றி ஒரு நிறுவனத்திலிருந்து மாத்திரம் கூறுவிலை பெறப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த கூறுவிலையின் அடிப்படையில் ரூபா 1,774,353 தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்தம் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.3.11(அ) மற்றும் 5.4.10 ஆம் பிரிவுகளின் படி கேள்விப் பிணையைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் செயலாற்றல் பிணை முறியைப் பெற்றுக் கொள்ளுதல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 8.9.1(அ) பிரிவின் படி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**4.6 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 291 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 207 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 84 ஆகும். ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதற்காக பிரதானமாக பங்களிக்கின்ற இரண்டு பிரிவுகள் அதாவது Spectrum Management Network & Technology பிரிவு

மற்றும் Economic & Legal Affaires பிரிவுகளில் மாத்திரம் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 42 ஆகும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு புறம்பான பதவிகளுக்காக 11 பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இந்த மிகையான ஊழியர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது நிருவாக அமைச்சிலிருந்து விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I பதவிக்கு மாத்திரம் சேர்க்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) பதவியில் அமர்த்தி அப்பதவிக்குரிய சம்பளமும் ஏனைய சலுகைகளும் வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 யூலை 31 ஆந் திகதி வரை சேவை நீடிப்பும் வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2014 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் படி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் (ஈ) இன் படி ஆணைக்குழுவால் மீளாய்வாண்டிற்குரிய கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்குமிடையே போதியளவான முரண்கள் அவதானிக்கப்பட்டன. சில முரண்கள் 10 சதவீதம் முதல் 19,980 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. பாதீட்டில் உள்ளடக்கப்படாத 08 விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 14,478 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் படி பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கடப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2012 ஆம் ஆண்டிற்கும் 2013 ஆம் ஆண்டிற்குமான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு 2015 யூன் 19 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகிறது.

(அ) பாதீடு
(ஆ) கூட்டிணைந்த திட்டம்
(இ) கடன்பட்டோர்
(ஈ) முதலீடு
(உ) கொள்வனவு
(ஊ) படிகளைச் செலுத்துதல்
(எ) ஒப்பந்த நிர்வாகம்
(ஏ) வருமானங்களைச் சேகரித்தல்